# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60. தொலைபேசி: 23411 நிறுவியது 1947.

வள்ளுவர் ஆண்டு 2008 | முஹர்ரம் 25 | தை 3 (16-1-77) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 77






பாவியுங்கள்
பளிச்சிடும் வெண்மைக்கு
றோயல் நீலம்
தயாரிப்பாளர்கள்:
சிவா இன்டஸ்ரீஸ்
112 1/3, 4ம் குறுக்குத்தெரு,
கொழும்பு-11.
விநியோகஸ்தர்கள்:
சேகர் அன் பிறதர்ஸ்,
ஆதம்மலி கட்டிடம்,
20, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.
தொலைபேசி: 35049


## கம்யூனிஸ்ட் - சுதந்திரா உறவில் விரிசல்!

### உதைத்துத் தள்ளப்படும்வரை ஒட்டியிருக்க

# கொம்யூனிஸ்டுகள் முடிவு?

ஆளும் கட்சிக் கூட்டணிக்குள் மிகப்பெரிய விரிசல்தோன்றியிருப்பதாகவும், சுதந்திரக்கட்சிக்கும்—கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையேயுள்ள உறவு துண்டிக்கப்படவேண்டிய நிலைக்கு வந்துவிட்டதாகவும் அரசியல் வட்டாரங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. எதுவந்த போதிலும் தாமாக அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதில்லையென்றும், சமசமாஜக் கட்சியினர் உதைத்துத் தள்ளப்பட்டது போல தாமும் இறுதியாக உதைத்துத் தள்ளப்படும்வரை அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டேயிருப்பதென்றும் கம்யூனிஸ்டுகள் முடிவுசெய்திருப்பதாகவும் இதே வட்டாரங்களில் சொல்லப்படுகிறது.

தற்பொழுதுள்ள அரசியற் சூழ் நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமென்பது பற்றி கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி கொழும்பில் அவசரமாக இந்த வாரம் கூடி இரண்டு நாட்களாக நிலைமைகளை விரிவாக ஆராய்ந்ததாகத்தெரிகிறது! கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள 'தீவிரவாதிகள்' அரசாங்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் கட்சி உடனடியாக வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தினார்களாம். எனினும், சமசமாஜக் கட்சியினர் உதைத்துத் தள்ளப்பட்டதுபோல — தாமும் இறுதியாக உதைத்துத் தள்ளப்படும்வரை அரசாங்கத்துடனேயே ஒட்டியிருப்பது என்று கம்யூனிஸ்டுகள் கடைசியாக முடிவு எடுத்ததாகவும் தெரியவருகிறது.

இதற்கு முன் சுதந்திரக் கட்சியையும், லங்கா சமசமாஜக்கட்சியையும் மீண்டும் இணைத்துவைக்கும் தரகு வேலையில் கம்யூனிஸ்டுகள் சிலர் ஈடுபட்டிருந்ததாகவும், அது வெற்றியளிக்கவில்லையென்றும், இதே வட்டாரங்களில் மேலும் சொல்லப்படுகிறது.

சுதந்திரக்கட்சியின் கட்டுப்பாட்டை மீறி இடதுசாரிகளுக்கு சார்பாக நடந்துவரும் ஒரு சு. கட்சிப் பா. உ., சுதந்திரக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட விருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

## துரையப்பா கொலைவழக்கு

### எழுத்தாணை மீது அடுத்தவாரம்விசாரணை!

துரையப்பாகொலை வழக்குத்தொடர்பாக ஏழு எதிரிகளின் சார்பிலும் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மீதான விசாரணை 18-1-77 செவ்வாய்க்கிழமை பிரதம நீதியரசர் விக்டர்தென்னக்கோன், நீதியரசர்கள் ஜி. டி. சமரவிக்கிரமா, ரி. டபிள்யூ. ராஜரத்தினம், ஜனுப் இஸ்மாயில், ஜே. ஜி. ரி. வீரரட்ண ஆகியோர் முன்னிலையில் ஆரம்பிக்கவிருக்கிறது. எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். நடேசன் கியூ. சி. எம். சிவசிதம்பரம், வி. எஸ். ஏ. புள்ளைநாயகம், கே. கந்தசாமி, நீலன் திருச்செல்வம், கே. கனக ஈஸ்வரன், எஸ். மகேந்திரன், எஸ். ருத்திரமூர்த்தி ஆகியோர் ஆஜராகின்றனர்.



## தை மகளே வா!

கைகள் அசைய வளை குலுங்க
களமாம் வயலின் சேற்றினிலே
தைய லர்கள் நாற்றிடவே
தளைத்து வந்த நெல் மணியே
கன்னியர் சூழ்ந்து கதைப்பது போல்
கலகலப்பாக ஓசையிடும்
உன் நிலை கண்டு பெருமை பெறும்
உழவன் திருநாள் வாழியவே!

கன்னித் தமிழர் களம் விரைந்து
கடிதிற் பகையை வென்றிடவே!
எண்ணித் துடிக்கும் நாளினிலே!
ஏற்றம் தரவா தை மகளே!
முன்னே தமிழர் அரசாண்ட
முறையை அறியா மூடர்களால்
அன்னைத் தமிழாள் வாடுவதை
அறிந்தே வருவாய் தை மகளே!

தோழர் பலரைச் சிறையிட்டு
துயர்கள் தந்து எம்மினத்தை
ஆளும் திமிர்கொள் அம்மையரின்
ஆணவத்தைப் போக்கிடவே!
வேழமாகத் தமிழர் குழாம்
விழித்தெழுந்தே! செயலாற்றும்
நாளே! பொங்கற் திருநாளே!
நலமே! தர நீ வந்திடுவாய்'

— உடுவைக் கவிஞர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# கவிதைப் பொங்கல்

## தமிழ் நாட்டில், பொங்கிடுவோம்!

காலைக் கமலினியின், காதலனும் வந்தங்கே!
நீலத் திரைகிழித்து, நிற்கின்ருன்' எம்மினத்தின்,
கோல நிலையறிவான், கொடுமின்னல் தானறிவான்,
பால் பொங்கல் வேண்டான், பைங்கிளியே! பொங்குவதேன்?!

மூத்தவளே! நாளை முடிசூடக் காத்திருக்கும்,
தத்துவத்தைப் பெற்ற தமிழணங்கே! உந்தனுக்கு,
புத்திரனுய் வந்து பிறந்திட்ட பெருமையுடன்,
சத்தியமாய் நாளைத் தமிழ் நாட்டில் பொங்கிடுவேன்!

கற்ற தமிழறிவால், கவி புனையும் ஆற்றலினைப்,
பெற்ற கவி மகனும், பெருஞ் சேனைத் தோழர்களும்,
உற்ற சிறை மதிலே! உனைக் காண வருவதற்கு;
மற்ற இளைஞர்களும், மார்தட்டிப் பொங்குகிருர்!

முல்லை இதழ் விரித்து, முகம் மலர வரவேற்று,
செல்லக் கிளி மொழியால், சேரவரும் காதலிகள்,
தொல்லையதே இன்றித் துணிந்தெழுந்த காளைகள் நாம்,!
நல்ல தமிழ் நாட்டை, நாடியின்று பொங்கிடுவோம்,!

—உடுவை குகதாசன்

* * *

## கமம் செய்வோர் வாழ்க

மலரெடுத்துத் தொடுத்து வைத்தால் மாலை ஆகும்
மனமிரண்டு சேர்ந்துவிட்டால் காதல் ஆகும்
மகளிர் பலர் கூடிவிட்டால் குழப்பம் ஆகும்
மழை நன்ருய்ப் பொழிந்துதவின் மண்ணும் வாழும்!

பல நூல்கள் கற்றறிந்தால் அறிஞன் ஆக்கும்
பருவத்தே பயிர் வளர்ப்பின் விளைவு கூடும்
உலகத்தில் உண்மைக்கே உழைத்து வந்தால்
உத்தமன் என்று நிதம் உலகம் போற்றும்.

தன்னுயிர் போல் மன்னுயிரைச் காத்து வந்தால்
தர்மத்தாய் மகிழ்ந்து நிதம் வாழ்த்துரைப்பாள்
இன்முகத்தோடினிய உரை பேசி வந்தால்
ஏழுலகும் தெய்வமென மகிழ்ந்து வாழ்த்தும்.

தாய் மொழியைத், தாய்நாட்டைத் தன்னைப் பெற்ற
தாய் என்ற தவத்திருவைப் போற்ருராகில்
சீர் கொண்ட பலநிலையும் பெற்ருரேனும்
ஊர் முழுதும் அவர் முகத்தைக் காண நாணும்.

மண் வளத்தைச் சீருறவே மிகைப் படுத்தி
மக்கள் பசி அகலுதற்கே கலப்பை ஏந்திக்—
கண்ணிணைப் போல் மக்கள் தமைக் காத்து நிற்கும்
மன்னர்களாம் கமம் செய்வோர் வாழ்க வாழ்க!!

— மாந்தீவு அமரன்

* * *

## பொங்கல் பொங்குவோம்!

ஒன்றுபட்ட தமிழர்கள் என்றுமிந்தப் பூமியில்
ஒன்றுபட்டு வாழ்ந்திட இன்று பொங்கல் பொங்குவோம்!
நன்றிகெட்ட சாதிகள் மண்டியிட்டு எங்களின்
நாய்களாக வாழ்ந்திட நாங்கள் பொங்கல் பொங்குவோம்!

எங்கும் எங்கள் செந்தமிழ் மங்கிடாத மாமகள்
இன்ப ஆட்சி செய்திட இன்று பொங்கல் பொங்குவோம்!
அங்கமெல்லாம் சாயினும் செங்குருதி பாயினும்
எங்கள் கொள்கை வென்றிட இன்று பொங்கல் பொங்குவோம்!
உரிமை கேட்டு என்றுமே அடிமையாக வாழ்வதா?
உறுதிகொண்டு வென்றிட இன்று பொங்கல் பொங்குவோம்!

சிறைக்கதவு தூள்பட நரிக்குணத்தோர் பாழ்பட
செருக்களத்தை நாடி நாம் சென்று பொங்கல் பொங்குவோம்,
நொடிப் பொழுதில் நம்மவர் புலிப்படையாய் மாறிட
பொடிப்பொடியாய்த் தீமைகள் மடிந்துவீழப் பொங்குவோம்

—செ. குணரத்தினம்

* * *

## இனித்திடுமா இப்பொங்கல்

பைந்தமிழன் காசியண்ணு காணுத பொங்கல்
கடுஞ்சிறையில் அவனிருக்க எமக்கென்ன பொங்கல்
செந்தமிழன் வண்ணையவன் காணுத பொங்கல்
கொடுஞ்சிறையில் அவனிருக்க எமக்கேது பொங்கல்
நம் தமிழன் சேனுதி காணுத பொங்கல்
வெஞ்சிறையில் அவனிருக்க எமக்கென்ன பொங்கல்
எம் தமிழின் இளைஞா பலர் காணுத பொங்கல்
இனித்திடுமா இப் பொங்கல் இயம்பிடுவாய் தமிழா
செல்வாவின் தலைமையிலே தமிழர் பொங்கி
உண்டாகும் உணர்ச்சியிலே வீரம் பொங்கி
எல்லோரும் ஒன்ருகி உள்ளம் பொங்கி
கண்டோர்கள் கணநேரம் கதி கலங்க
எல்லாளன் ஆண்ட தமிழ் எங்கும் பொங்கி
கொண்டாடும் இதயங்கள் எல்லாந் தங்கி
பல்லாண்டு வாழத் தமிழ் ஈழம் கண்டால்
இனித்திடும் பொங்கலது உண்மையிது தமிழா.

—குச்சவெளி ஆனந்தன்.

## பூங்குயில் கூவுநாள்!

ஒளிமகன் கதிரவன் சிரித்திடும் திருநாள்!
இழவுகள் ஒழிந்திடும் புதுமகள் பெருநாள்!
விழிமகள் மழையாள் விலகிடும் ஒளி நாள்!
வாழையின் கனிகள் செங் கரும்பொடு எழுநாள்!
களிகொள் உணர்வாய் காதலர் இணைநாள்!
கனிபல திரண்டு தேன்சாருய் விழுநாள்!
இழிவுகள் அகல தமிழ் ஈழப் பெருமைகள் தெரிய
எழுந்திடும் புதுநாள்! இன்பப் பொங்கலாம் தை நாள்!

மஞ்சளும் இஞ்சியும் மணத்திடும் மணநாள்!
மங்கையர் காதல் பொங்கிடும் வெறிநாள்!
ஊஞ்சலில் காதலி தமிழ் உணர்வொடு ஆடிட
அத்தான் வந்துநல் தமிழ் ஈழக்கதைகள் கூறு நாள்!
பஞ்சமும் பசியும் பொடிபடும் உயர்நாள்!
பாங்கான தமிழ் ஈழ உரிமைகள் சேர்நாள்!
கொஞ்சிடும் கிளிகள்கூட்டை உடைத்துப் பறந்திடும் வெற்றி நாள்!
கோவைக் கனித்தமிழ் இழந்த மண்ணை பெறு நாள்!

காளைத் தமிழர்கள் சிறையை உடைக்கும் நாள்!
கன்னித் தமிழாள் புதுநாடு சமைக்கும் நாள்!
வேளை வந்திடும்! கோடைப்பூவின் மணமோ பரவு நாள்!
வாகை புரிந்துநல் தமிழ் ஈழம் பெறுநாள்!
கோழை நெஞ்சரை போர்க்களத்தில் செங்குருதியில் வதைக்கும் நாள்!
கொள்கை உறுதியர் தமிழ்ஈழம் எடுக்கும் நாள்!
ஊளை நாய்களை தமிழ் மண்ணிலே புதைக்கும்நாள்!
இழந்த உரிமையை உலக அரங்கினில் நிறுத்தும் நாள்!
சிங்களச் சிறையில் செந்தமிழா! உன் இளைஞர்
சித்திரவதைப் படுகின்ருர்! செழுந்தமிழா! பொங்கலாம் இன்னுளில்
தங்கத் தமிழ்கொண்டு தரமான சபதம்செய்வோம்!
திங்குகள் கோடிதான் வத்தாலும் தீமைகள் சுற்றிச் சுழன்ருலும்
அங்கங்கள் வெட்டிச் சிதைத்தாலும் தூக்குக் கயிற்றிலே தொங்கவேவிட்டாலும்
அலாம் நெருப்பிலே பொசுக்கி எடுத்தாலும்
தூங்காத் தமிழா' துடித்துப் படைதிரட்டி
தமிழ் ஈழம் காணவா! இதுவே நல்ல பொங்கல்!

ஒப்பந்தம் என்பது உதவாது என்னும் நாள்!
அடா! பேச்சுவார்த்தையா? யாருக்கு வேண்டும் என வீசும் நாள்!
கப்பம் கட்டி நாம் வாழ்ந்தோமா? தமிழ் ஈழந்தான் எனச் செப்பு நாள்!
குப்பனும் மலை மீனுட்சியும் கண்ணீர் சிந்துதல் தொலைக்கும் நாள்!
அப்பனும் அம்மையும் வாழ்ந்த மண்ணினை மீட்கும் நாள்!
அன்னியன் பறங்கியால் இழந்ததை தேடும் நாள்!
அப்பனே! தங்குமடம் யாருக்குத் தேவையென முழங்கும் நாள்!
ஆகா! பூங்குயில்கூட தமிழ் ஈழம் கூவுநாள்!

—ஆரையம்பதி ஆ. தங்கராசா

* * *

## பொங்கட்டும் பொங்கல்!

பொங்கட்டும் பொங்கல்
பூத்தூவிப் பாடட்டும்
தங்கட்டும் தங்கி
தமிழ் ஈழம் காணட்டும்
சிங்கத்தின் செல்வங்கள்
சிந்தனையில் வெறி ஏறி
சங்கொலியும் முழவொலியும்
சமர்க்களத்தில் கேட்கட்டும்

ஆருண்டு காலம்
அடுத்தடுத்து துயர் கடந்தோம்
மாருமல் இவ்வாண்டு
மலரட்டும் தமிழ் ஈழம்
கூருகப் போகாமல்
குலப் பெருமை பேசாமல்
சேருகும் உதிரத்தில்
செழிக்கட்டும் தமிழ் ஈழம்!

எத்தைக்கும் இல்லாத
எழிற் சிறப்பு இத்தைக்கு
முத்துப் புகழேட்டில்
முத்தமிழர் வரலாற்றில்
சத்துள்ள எம்சாதி
சாற்றிப் புகழ் பெறவே
அத்தைக்கு சொல்லி
ஆர்த்தெழட்டும் தமிழ் ஈழம்

—கட்டுவன் சிவஞானம்

* * *

## மலர்கவே!

எழுகின்ற செங்கதிர் எழுகவே
உழவர்கள் வாழ்வு செழிக்கவே!
எழுகின்ற பொன்கதிர் வருகவே
உழைக்கும் கரங்கள் களிக்கவே!!
எழுகின்ற வெண்கதிர் அருள்கவே
உலகிற் பல்வளம் நிலைக்கவே!
எழுகின்ற இளம்கதிர் ஒளிர்கவே
தமிழர்கள் ஆட்சி மலரவே!!

—முருகு

## தங்குமடம்

சுமைதாங்கி

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதெல்லாம் வெறும் கப்சா. தையும் பிறந்துவிட்டது அரசின் விழிதான் பிதுங்கிக்கொண்டிருக்கிறதாம். வளாத்த கடாக்கள் மார்பில் பாய்கிருர்களாம் என்ருேர் செய்தி கூறுகிறது. அரசிலிருந்து வெளியேறிய ஒரு கட்சியினரைத் திரும்பவும் அரசில் பங்காளிகளாக்குவதற்கு பீட்டர் தோழர்களால் எடுக்கப்பட்ட முயற்சிகளெல்லாம் முழுமனத்தோடு முற்ருக நிராகரிக்கப்பட்டுவிட்டதாம்.

நிராகரிக்கப்பட்டு நிராதரவானவர்களெல்லாம் வேண்டுமானுல் நீலக் கட்சிக்கு மாறலாமாம். தனி நீலத்துக்குத்தான் அரசின் பங்காளிகளாக இடமுண்டு வேறு நிறங்களுக்கு வேறிடம் பாருங்கள், வேண்டுமானுல் எமது ஆதரவாளர்களாக விரும்பினுல் இருந்துவிட்டுப் போங்கள். அவ்வப்போது ஏதாவது பெறுவதோடு திருப்தி அடைந்து கொள்ளுங்கள் என்று அதிகார தோரணையுடன் கூறப்பட்டுள்ளதாம்.

அதிகாரத்துக்குப் பயந்த தோழர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கிருர்களாம். அந்தோ பரிதாபம் இந்தத் தோழர்களின் தலைமையை நம்பிய ஈழத் தமிழகத்தின் தோழர்கள் விரக்தி மனப்பான்மை மேலிட்டவர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணியிடம் புகலிடம் கோரினுலென்ன என்று யோசிப்பதாகத் தெரிகிறதாம்.

யோசனை எதற்கு? கட்சி வேறுபாடின்றி தமிழர் விடுதலைக் கூட்டணி யாராயிருந்தாலும் அடைக்கலம் கோருவோரை அனுதரவாக விட்டுவிடாதென்று நம்ப இடமுண்டு. கடந்தகாலச் சரித்திரம் இதற்குச் சான்று பகரும். சிங்களக் கட்சிகளிலிருந்தோர் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் இல்லையா என்ன? சிங்களக் கட்சிகள் சிங்களவருக்காக சிங்களவரினுல் இயக்கப்படுகிறது. சிங்களவரின் விருப்பத்திற்கிசையவே எந்தக் கட்சியும் இயங்க முடியும்.

சிங்களவரின் விருப்பம் என்ன என்பதை காலஞ்சென்ற இரும்பு மனிதர் அமரர் நாகநாதன் அவர்கள் நன்கு அறிந்து வைத்திருந்தார். எந்தச் சிங்களவனும் தமிழனை அடிமைப்படுத்தவே விரும்கிருன் என்று அவர் மறுபேச்சுக்கிடமின்றிக் கூறிச் சென்றுள்ளார். நானறிந்த வரையிலும் நூற்றுக்கணக்கான எனது சிங்கள நண்பர்கள் கூட இதே அபிப்பிராயத்தைத்தான் கொண்டுள்ளனர். தமது விருப்பம் அப்படியல்ல என்று வெளிவேசம் போடும் சில சிங்கள நண்பர்கள் தமது சொந்த விருப்பத்திற்கு எதுவும் செய்வதற்கில்லை என்று சுலபமாகத் தப்பிவிடுகின்றனர். சிங்களக் கட்சிகளிலிருந்து பல்வேறு தருணங்களில் ஈழத் தமிழர்கள் பல்வேறு காரணங்கள் கூறி வெளியேறியுள்ளனர்.

வெளியேறியவர்களின் இடத்தை நிரப்புவதற்கு எங்கிருந்தோ வேறு சில திடீர் பிரமுகர்கள் தோன்றிவிடுகின்றனர். அடிமையாக இருக்க விரும்பினுல் அமைச்

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் போரில் தூக்குமேடையேறிய

# வீரன் மதன்லால் திங்ரா!

## விடுதலை வீரர்களைக் கொன்ற ஆங்கிலேய அதிகாரியை பழிவாங்கிய தேசபக்தன்

இந்திய விடுதலைப் போரிலே பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திற்கெதிரான வன்முறைக் கிளர்ச்சியானது ஒரு தனி இயக்கமாகவே இருந்துவந்திருக்கிறது உண்மையில் அந்த இயக்கந்தான் தேசபக்தர்களை சிறைச்சாலைகளுக்கும் தூக்குமேடைகளுக்கும் அனுப்புகின்ற பணியைத் தொடங்கி வைத்ததெனலாம்.

திலகர் பெருமான் 1896ம் ஆண்டிலேயே ஒன்றரை ஆண்டுகாலக் கடுங்காவல் தண்டனை பெற்றது, புனுவில் ஒரு ஆங்கில அதிகாரியைக் கொன்ற தேச பக்தனைப் பாராட்டி எழுதியதற்காகத்தான்!

144 தடைச் சட்டம், ரௌலட்சட்டம், வங்காள ஆள்தூக்கிச் சட்டம் ஆகிய கொடுமையான சட்டங்கள் தோன்றக் காரணமாகஇருந்தது இந்திய விடுதலைப் போரில் தனித்தன்மை பெற்றிருந்த வன்முறைப் புரட்சிதான். வங்காளம், மகாராஷ்டிரம், பாஞ்சாலம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் வன்முறைப் புரட்சிகள் அடிக்கடி நிகழ்ந்து வந்தன. இந்தப் புரட்சியின் கர்த்தாக்கள் லண்டன் மாநகரிலேயே முகாம் போட்டிருந்தனர். நாடு முழுவதிலும் வன்முறைப் புரட்சியைத்தோற்றுவிக்க முயன்ற இவர்கள், சாமான்யர்கள் அல்லர். உயர்கல்வி கற்றவர்கள். பணக்காரக் குடும்பங்களில் பிறந்தவர்களாகவும் இருந்தனர். அவ்வளவு பேரும் இளைஞர்கள். இந்த வன்முறைப் புரட்சி தோன்றிய காலத்திலே இந்து மதத்தில் அழுத்தமான பற்றுடையவர்களே அதில் பங்குகொண்டனர். இவர்களிலே பெரும்பாலோர் தலைமறைவிலிருந்துகொண்டுதான் செயல் புரிந்துவந்தனர். இந்திய விடுதலைவேள்வியிலே தங்கள் ஆவியையே அர்ப்பணித்துக் கொள்வதென முடிவுஎடுத்தவர்களே இந்தப் பலாத்காரப் புரட்சியில் கலந்து கொண்டனர்.

### உயிரைக் குறிபார்த்தனர்

இவர்களிலே, மதன்லால் திங்ரா என்பவர், பஞ்சாப் மாநிலத்தைச்சார்ந்த இந்து. நல்ல வைதீகக் குடும்பத்தில் பிறந்தவர். இவர், லண்டனில் தங்கி கல்வி பயின்றபோது, அங்கு முகாம்போட்டிருந்த வன்முறைப் புரட்சியாளரோடு இவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. கர்ஸான்வாலி என்ற ஆங்கிலேயர் துப்பறியும் இலாகாவில் உயர் அதிகாரியாக இருந்து வந்தார்; லண்டனில் முகாம் போட்டிருந்த இந்தியப் புரட்சியாளர்களைக் கண்காணிக்கும்பொறுப்பில் கர்ஸான்வாலி நியமிக்கப்பட்டிருந்தார். அவர் தனது கடமையைக் கடுமையாக நிறைவேற்றி வந்த காரணத்தால் புரட்சியாளர்கள் அவரது உயிரைக் குறிபார்த்தார்.

திரு. மதன்லால் திங்ரா, ஒரு நாள் கர்ஸான் வாலியைச் சுட்டுக்கொன்ருன். இந்தக்கொலை பிரிட்டனிலேயே பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவத்தைக் கண்டித்து எழுதாத பிரிட்டிஷ் பத்திரிகையே இல்லையெனலாம்.

### அயர்லாந்து பாராட்டு

அப்போது, பிரிட்டனுக்கு அண்டையிலுள்ள — அதன் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த — அயர்லாந்து நாட்டிலே விடுதலைப் புரட்சி நடந்துகொண்டிருந்தது. அதனால், கர்ஸான் வாலி கொலை நிகழ்ச்சி அயர்லாந்து பத்திரிகைகளால் பாராட்டப்பெற்றது. திரு. மதன்லால் திங்ரா மீதான வழக்கு விசாரணை லண்டன் ஓல்டு பெய்லி நீதிமன்றத்தில் நடைபெற்றது. நீதிபதி ஆங்கிலேயராக இருந்ததால், அவரிடம் தனககு நியாயம் கிடைக்காதென்று கூறி, வழக்கு விசாரணையில்கலந்துகொள்ளமறுத்துவிட்டார் மதன்லால் திங்ரா.

அந்த நாளிலே, இந்தியப் புரட்சியாளர்கள், தங்கள் மீது சாட்டப்படும் குற்றங்களை மறுத்து, நீதி மன்றத்திலே எதிர் வழக்காடி, தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்வது உண்டு. திரு. திரு. திங்ரா அப்படி முயலவில்லை விசாரணையில் கலந்துகொள்ள மறுத்தாரென்ருலும், தாம் கர்ஸான் வாலியைக்கொன்ற குற்றவாளியே என்பதை நீதிமன்றத்தில் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார். ஒரு உண்மையான தேசபக்தன் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளமுயலக்கூடாது என்பதற்கு முன்மாதிரியாக விளங்கினுர் திங்ரா.

### வாக்குமூலம்

லண்டன் நீதிமன்றத்திலே திரு.திங்ரா கொடுத்தவாக்குமூலமானது பிரிட்டிஷ் ராஜதந்திரிகளையெல்லாம் கவர்ந்தது. அவர் குற்றத்தை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது உலகோர் பார்வையிலே இந்திய விடுதலைப் புரட்சியாளர்களின் அந்தஸ்தையே உயர்த்திவிட்டதெனலாம். மதன்லால் திங்ரா கொடுத்த வாக்குமூலத்தின் முக்கிய பகுதிகள் வருமாறு:—

''தேசாபிமானம்மிக்கஇந்திய இளைஞர்கள் தூக்கிலிடப்படும், நாடு கடத்தப்படும் மிருகத்தனமான செய்கைக்கு வஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக ஆங்கிலேயரின் இரத்தத்தைச் சிந்த அன்று முய[illegible]றேன் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேன். இம் முயற்சியி[illegible] நான் [illegible] சாட்சியைத் தவிர வேறு யாரையும் கலந்து ஆலோசிக்கவில்லை. என் கடமையைத் தவிர வேறு யாருடனும் சேர்ந்து நான் சதியாலோசனை செய்யவுமில்லை. அன்னியரின் துப்பாக்கி முனை கொண்டு அடக்கி வைக்கப்பட்டிருக்கும் ஒரு நாட்டு மக்கள், நிராயுதபாணிகளான ஓர் இனத்தினருக்காகப் போராடுவது அடிக்கடி மறுக்கப்பட்டிருப்பதால், அவர்கள் நிரந்தரமான போர் நிலையிலேயே இருக்கிருர்கள் என்று நான் நம்புகிறேன.

“இந்து என்ற முறையில், நாட்டுக்கு இழைக்கப்படும் தீமையை கடவுளுக்குச் செய்யப்படும். அவமதிப்பாக நான் கருதினேன். அவளுடைய (தாய்நாட்டினுடைய) லட்சியம் ஸ்ரீராமரின் லட்சியம், அவளுக்குச் செய்யும் சேவை ஸ்ரீ கிருஷ்ணனுக்குச் செய்யும் சேவை. செல்வத்திலும் அறிவிலும் ஏழையான என்னைப் போன்ற ஒரு மகன், தன் தாய்க்கு அர்ப்பணம் செய்யக்கூடியது தனது சொந்த இரத்தத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனவே, அதையே அவளுடைய திருவடிகளில் அர்ப்பணஞ் செய்கிறேன்.

''இந்தியாவுக்கு இப்போது தேவைப்படும் படிப்பினை எப்படிச் சாவது என்பதை அறிந்து கொள்வதே. இதைப் போதிப்பதற்குள்ள ஒரேவழி நாமே சாவதுதான். ஆகையால், நான் உயர்ந்த லட்சியத்திற்கு உயிரைக்கொடுத்துக் கீர்த்தியுடன் சாகிறேன்,

“கடவுளிடம் ஒன்றே ஒன்றுக்காகத்தான் பிரார்த்தனை செய்கிறேன். என் தாய்நாடு தன்னுடைய லட்சியத்தில் வெற்றியடைந்தது மனித வர்க்கத்தின் நன்மைக்காகவும் கடவுளின் அருளுக்காகவும் சுதந்திரத்துடன வாழத் தொடங்கும்வரையில், நான் இதே தாய்நாட்டின் மகனுகப் பிறந்து, இதே தெய்வீக லட்சியத்திற்காகத் திருமபவும் சாக அருளவேணடும். இதுவே என் பிரார்த்தனை. வந்தே மாதரம்.''

பிற்காலத்தில் பிரிட்டிஷ் பிரதமராக இருந்து உலகப் புகழ்பெற்ற வின்ஸ்டன் சர்ச்சில் அப்போது பிரிட்டனின் அமைச்சராக இருந்தார். அவர், ‘தேசாபிமானத்தின் பெயரால் இதுவரை செய்யப்பட்டிருக்கும் சொற்பொழிவுகளிலெல்லாம் சிறந்தது’ என்று கூறி, மதன்லால் திங்ராவின் வாக்குமூலத்தைப் பாராட்டினுர்.

### காந்திஜி பாராட்டு

காந்தியடிகள் மதன்லால் திங்ராவின் கொலைச் செயலை வெறுத்தார் என்ருலும், வெளிப்படையாக குற்றத்தை ஒப்புக்கொண்ட அவரது ஒழுக்கத்தையும், உயிரைத் தியாகம் புரிந்த வீரத்தையும் பாராட்டினுர்.

கர்ஸான் வாலியின் கொலை காரணமாக லண்டனில் இந்திய விடுதலை வீரர்கள் தங்கியிருந்த ‘இந்தியா விடுதி’ பிரிட்டிஷ் பொலிசாரால் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டது. மகாராஷ்டிரத்தின் மாபெரும் தலைவரான விநயக தாமோதர சவர்க்கார் போன்ற விடுதலை வீரர்கள் பலர் கைதுசெய்யப்பட்டனர்.

இத்தகு வீர வரலாற்றைப் படைத்த மதன்லால் திங்ரா இந்தியப் பெருநாடு விடுதலை பெற்ற பின்னுள்ள 30 ஆண்டுக் காலத்திலே சரியாகப் போற்றப்படவில்லை. அவருடைய அஸ்தி லண்டனிலேயே மதிப்பாரற்றுக்கிடந்தது. இப்போதுதான் அது இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் அந்த அஸ்திக்கு அஞ்சலி செலுத்தி அதனை ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

(நன்றி: செங்கோல்)

---

# “சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்க!”

## இலங்கைப்பிரதமருக்கு ம. பொ. சி. இடித்துரை!

''இலங்கை பூர்வகுடித் தமிழரின் வருங்காலத்திலேயும் இந்தியத் தமிழருக்கு ஆழ்ந்த கவலை உண்டு. இலங்கையின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கினர் தமிழராவர். அவர்களில் பெரும்பாலோர் இரு வேறு மாநிலங்களில் சேர்ந்தாற்போல் வாழ்கின்றனர். ஆகவே, இலங்கை வாழ் தமிழர் பிரச்சினையானது மொழிவழிச் சிறுபான்மையினர் பிரச்சினையாக மட்டுமல்லாமல், பிரதேசப் பிரச்சினையாகவும் இருந்துவருகிறது.

“இலங்கை பூர்வ குடித் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு வரவிருக்கும் பொதுத்தேர்தல் பயன்படுமானுல், இந்தியத் தமிழர்களுக்கு அது மகிழ்ச்சி தருவதாக இருக்கும். தமிழரும் சிங்களவரும் சகோதர உணர்வில் ஒரே நாட்டினராக ஒன்றுபட்டு வாழவேண்டும் என்பதே இந்தியத் தமிழினத்தாரின் விருப்பம். ஆனுல், கடந்த கால் நூற்ருண்டுக்கு மேலாக இலங்கையில் சிங்களவருக்கும் தமிழருக்குமிடையே நல்லுறவு நிலவவில்லை. வரவிருக்கும் பொதுத்தேர்தலையொட்டியேனும் சிங்களவர்—தமிழர் உறவுக்கு பிரதமர் சிறிமாவோ வழி காண்பாரானுல், அது வரவேற்கப்படும்.

இலங்கைத் தமிழர் சிங்[illegible] சமமான



நிலையில் தங்கள் தாய்மொழியான தமிழுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று கோரிவருகின்றனர். இதிலே “அரசியல்'' கிடையாது. அப்பட்டமான மொழிப் பிரச்சினை. இலங்கைக்கென அரசியல் சட்டம் அண்மையில் தயாரிக்கப்பட்டது. அதிலே, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து தரும் விதிகள் சேர்க்கப்பட்டிருக்குமானுல், அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் இலங்கை தமிழ்ப் பிரதேசத்தில் ஏற்பட்டதொல்லைகளைத் தவிர்த்திருக்கலாம். பிரதமர் சிறிமாவோ சிறந்தராஜதந்திரிதான் என்ருலும், தமிழர் விஷயத்தில் அவர் தமது ராஜதந்திரத்தை வெளிப்படுத்தத் தவறிவிட்டார். இலங்கை பூர்வகுடித் தமிழர்கள் மாநில சுயாட்சி கோரி வருகின்றனர். இது முற்றிலும் அரசியல் பிரச்சினை; சுயாட்சிக் கோரிக்கை சுதந்திர கோரிக்கையாக மாறக்கூடிய நிலையும் அங்கு உருவாகிவிட்டது. தமிழ் உரிமைப் பிரச்சினையில் இலங்கை அரசு சிங்களவர் சார்பில் ஒருதலைப் பட்சமாக நடந்துகொண்டதன் விளைவு இது.

''தமிழ் மொழியின் உரிமைக்கு உத்தரவாதம் தரும் வகையில் வரும் பொதுத்

—8-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## பொங்கலோ பொங்கல்!

**தை** பிறந்துவிட்டது. தைபிறந்தால் வழிபிறக்கும் என்ற முதுமொழி இற்றைநாட் தமிழர் வாழ்வில் ஒவ்வோராண்டும் பொய்மொழியாகவே போய்க்கொண்டிருக்கிறது; எத்தனையோ 'தை' பிறந்துவிட்டன இதுவரை; ஆனல் தமிழினத்தின் சுதந்திர சுபீட்ச வாழ்வுக்கு இன்னும் வழிதான் பிறக்கவில்லையேயென்று இருந்துவந்த கவலையை இத் தைத்திருநாள் போக்கிவிட்டது; தமிழர் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வழிவகையென்ன என்பதை சென்ற வைகாசியில் நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைப் பிரகடனம் தெளிவாக எடுத்துக்கூறி நிற்கிறது.

தைப்பொங்கலை உழவுத்தொழிலின் திருநாள்—உழவர்களின் பெருநாள் — உழைப்பின் பெருமையை உணர்த்தும் நாள் என்றெல்லாம் கூறுவார்கள்! ஆனல் இந்நாட்டிலோ இந்த மண்ணுக்காக மாடாக உழைத்து, ஓடாகத் தேய்ந்துபோன தமிழன் — இன்று ஒடுக்கப்பட்டு உரிமை மறுக்கப்பட்டு—ஒட்டாண்டியாக்கப்பட்டு ஓடஓட விரட்டப்படும் அவலநிலையைப் பார்க்கிருேம்!

தமிழன் மாடுபோல இந்த மண்ணுக்காக உழைத்தான்! அவனது உழைப்பை உறிஞ்சி உறிஞ்சியே இந்த நாடு மூன்னேற்றம் கண்டது! தமிழனின் கால்கள் பட்ட காடுகள் பசுஞ்சோலைகள் ஆயின; அவன் கைகள் பட்ட மலைகள் அள்ள அள்ளக் குறையாத செல்வத்தை வாரி வாரி வழங்கும் பாரிய தோட்டங்களாயின; இவ்வாறு காடுகளை வெட்டி, மலைகளைக் குடைந்து கழனியாக்கிய தமிழன், இன்று வாழவழியற்று, இருக்க சொந்த நிலமற்று, நாடற்றவனுக்கப்பட்டு, நடுவீதிக்கு விரட்டப்படுகிருன்! 'தேசியமயம்' தமிழனை நட்ட நடுவீதிக்குக் கொண்டுவந்துவிட்டது! உழைத்த தமிழன் கண்ணீர் வடிக்கிருன்; அவனது உழைப்பை உறிஞ்சிய சிங்கள ஏகாதிபத்தியமோ, தனது இனத்தவனை உப்பரிகையிலே அமர்த்துகிறது!

மலையகத்திலே சிங்களவனுக்கு உழைத்துக் கொடுத்ததுபோதும்; இனி எங்கள் தமிழ் ஈழத்திலே — எமது சகோதரர்களுக்கு மத்தியிலே—எமக்கென்ருேர் துண்டு நிலம் பெற்று — உழுதுண்டு வாழலாமென்றெண்ணி அங்கு சென்று காடுவெட்டும் தமிழனும் கைதுசெய்யப்பட்டு விரட்டியடிக்கப்படுகிருன் — சிங்கள ஆட்சியாளரால்!

இந்த நிலையில் தமிழனுக்கு கண்ணீர் பொங்குமே தவிர — பால் பொங்கிட வழியேது?

இந்த மண்ணில், தமிழுக்கும் தமிழினத்துக்கும், தமிழ் ஈழத்துக்குமுரிய சட்டரீதியான உரிமைகளை—உலகநாடுகள் மன்றத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் சர்வதேச சட்டரீதியிலான உரிமைகளை — கோரியதற்காக, எந்தவிதமான நீதிவிசாரணையுமின்றி கடந்த பல ஆண்டுகளாக — சித்திரவதைகளையும் கொடிய துன்பங்களையும் தாங்கிக்கொண்டு — சிங்கள ஏகாதிபத்தியத்தின் நீண்ட நெடிய சிறை மதில்களுக்குப் பின்னல் தமது இளமையை, வாழ்வின் வசந்த காலத்தையே — தமிழ் சமுதாயத்துச்காக அழித்துக்கொண்டிருக்கும் அந்த மெழுகுவர்த்திகளை — தமிழ் இளைஞர்களை எண்ணிடும்போது— இந்த தியாக இளைஞர்களை பிரிந்த பாச உணர்வு ஒருபுறமும், குடும்பத்தொல்லைகள் ஒரு புறமும் வாட்ட, அதையெல்லாம் தாய்நாடாம் தமிழ் ஈழத்தின் விடுதலைக்காகத் தாங்கியபடியிருக்கும் தாய்க்குலத்தை எண்ணிடும்போது — கண்ணீர்தான் பொங்குகிறதேதவிர— தமிழன் இல்லத்தில் பால் எப்படிப் பொங்கும்?

1974 தைத்திருநாள்—நமக்கோர் வேதனை நாளாக அமைந்தது. தை பத்தில் தமிழின் சுவைகேட்கச் சென்ற பல்லாயிரம் தமிழர்களில், ஒன்பதின்மர் பலியெடுக்கப்பட்ட—வரலாற்றில் மறக்கொணு ஆண்டல்லவா அது?

**அன்று தமிழுக்காக உயிர்நீத்த தமிழ்த் தியாகிகளின் நினைவாக இந்த ஆண்டு தை பத்தாம்நாள் மூன்ருவது தடவையாக நினைவுத்தூண்கள் நிறுவப்பட்டுள்ளது. இரு தடவைகள் துரோகிகளாலும், எதிரிகளாலும் இடித்துத்தள்ளப்பட்ட தியாகிகளின் நினைவுச்சின்னத்தை, மீண்டும் அதே இடத்தில் நிறுவியுள்ள வீர இளைஞர்களின் செயற்றிறனையும், அஞ்சாமையையும், ஆற்றலையும், இப் பொங்கற்றிருநாளில் மனம்திறந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிருேம்!**

தமிழினத்தின் சுதந்திரத்திற்கும், சுபீட்ச வாழ்வுக்கும் ஒரேவழி வட்டுக்கோட்டை மாநாட்டில் ஒரேமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 'தனிநாடு' தீர்மானமே என்பதை ஆரம்பத்தில் எடுத்துக் கூறியுள்ளோம், அந்தத் தீர்மானத்தை—முறைப்படுத்தி, நெறிப்படுத்தி, வகைப்படுத்தி இலட்சியத்தை சென்றடைவதொன்றே நம் சிந்தனையும் செயலுமாக இருந்திடவேண்டும்.

நம் சிந்தனையை மூடியிருந்த 'இருள்' விலக்கப்பட்டுவிட்டது. 'இலட்சியம்' தெளிவாக்கப்பட்டுவிட்டது! அதை சென்றடையவேண்டிய பாதையை சரியாக நிதானித்துக்கொண்டு—சரியான திசையில் ஒவ்வொரு காலடியையும் எடுத்துவைக்க இப் பொங்கற் புதுநாளில் உறுதி பூணுவோம்!

சுதந்திர சூரியனுக்குப் படைப்பதற்காக தியாகப் பொங்கலை—விடுதலை உணர்வுப் பொங்கலை—ஒவ்வொரு தமிழனும் பொங்கட்டும்!

பொங்கலோ! பொங்கல்!!







# சுதந்திரத் தமிழீழம் கண்டிட பொங்கல் நாளில் உறுதிபூணுவோம்!

## தலைவர்கள் தரும் வாழ்த்துச் செய்திகள்!

'**தை** பிறந்தால் வழி பிறக்குமென்று' நமது முன்னேர் கூறுவார்கள். தை முதல் நாள் வரும் பொங்கல் தமிழ் மக்களின் மிகச் சிறப்பானதொரு பண்டிகையாகும். உழவுத்தொழிலின் மகத்துவத்தையும் உழைப்பின் முக்கியத்துவத்தையும், நன்றியுணர்வையும் எடுத்துக்காட்டும் நல்விழாவாக இது அமைந்திருக்கிறது. விவசாயத்துக்கும், உயிர் வாழ்க்கைக்கும் மிகவும் இன்றியமையாதது சூரியன். அத்தகைய சூரியனுக்கு நன்றி பாராட்டும் விழாவாகாவும் இது அமைகிறது. எனவே இத்தகு சிறப்புவாய்ந்த தை முதல் நாளில் தமிழ்பேசும் மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு—நாம் தமது இலட்சியத்தில் ஒற்றுமையாகவும் கட்டுக்கோப்பாகவும் பிடிவாதமாகவும் இருந்து ஒரு தனிநாட்டைப் பெற உறுதியுடன் உழைக்கவும் இத் தினத்தில் உறுதியெடுப்போம்!"

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் மூதறிஞர் செல்வா அவர்கள் சுதந்திரன் மூலம் தமிழ்பேசும் மக்களுக்கு விடுத்துள்ள பொங்கல் தினச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சுடர்
CHUDAR

தித்திக்கும்
'தை' இதழ்

- கலைஞர் மு. கருணநிதி
- கவிஞர் காசி ஆனந்தன்
- இரசிகமணி கனக. செந்திநாதன்
- சாண்டில்யன்

ஆகியோரின் எழுத்தோவியங்களும்

- கல்கி கண்ட தமிழ் மாநாடு

தொடர் கட்டுரை ஆரம்பம்
சுவையான சிறுகதைகள்,
மற்றும் பல அம்சங்களுடன்

அடுத்த வாரம்
எங்கும் கிடைக்கும்

### நாவலர் தரும் நல்வாழ்த்து!

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் கற்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியெனும் அடுப்பில், 'தன்னல மறுப்பு' எனும் பானையில் தியாகம் எனும்பெரு நெருப்பில், இலட்சியப் பொங்கல் பொங்கி, தமிழீழ விடுதலையெனும் சர்க்கரைப் பொங்கலை சாதி, சமய வர்க்கவேறுபாடுகளற்று தமிழ்பேசும் மக்கள் அனைவரும் சரி சமமாகப் பகிர்ந்து உண்ண வேண்டுமென்பதே நமது கனவாகும். இந்த இலட்சியம் நிறைவேறவும், தமிழ்பேசும் மக்கள் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழவும் இறுதிவரை உழைப்பதென்று பொங்கல் நாளில் தமிழர்கள் அனைவரும் உறுதியெடுப்போமாக. தம்மையே அழித்து இனத்துக்கு ஒளி கொடுக்கும் மெழுகுவர்த்திகளாக— தம்மையே தேய்த்து மற்றவர்க்கு மணம் கொடுக்கும் சந்தனக் கட்டைகளாக — சிறைச்சாலையில் விசாரணையின்றி நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டிருக்கும் எனது உடன்பிறப்புக்களையும் எண்ணிப் பார்த்து அவர்கள் இருக்கும் திசைநோக்கி எனது வணக்கத்தையும் இப்பொங்கல் நாளில் தெரிவித்துகொள்ளுகிறேன்!"

—இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் விடுத்துள்ள பொங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### சிவசிதம்பரம் செய்தி

த. வி. கூட்டணியின் மற்ருேர் செயலதிபரான திரு. மு. சிவசிதம்பரம் விடுத்துள்ள செய்தி வருமாறு:-

"தமிழ் மக்கள் மத்தியில் கொண்டாடப்பட்டு வரும் விழாக்களில் பொங்கல்விழா தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். பொங்கல் விழா ஒரு சமயத்துக்கோ, ஒரு சாதிக்கோ, ஒரு பிரதேசத்துக்கோ உரிய விழாவன்று தமிழ் மக்கள் அத்தனை பேருக்கும் பொதுவான விழாவாகும். இப்பொங்கல் நாளில் தமிழினம் தன்னுடைய இன்றைய அடிமை நிலையைத்துடைத்தெறிந்து சுதந்திரம்பெறுவதென்று சபதம்எடுக்கவேண்டும். கட்டுப்பாட்டுடனும், ஒற்றுமையுடன். தமிழர்விடுதலைக் கூட்டணியென்ற ஒரே அமைப்பின் கீழ் ஒரே இலட்சியத்துக்காகப் போராட பிரதிக்ஞையெடுத்துக்கொள்ளவேண்டும்; சாதி பேதங்களையும், பிரதேச வேறுபாடுகளையும் களைந்து ஒன்றுபடுவோமானல், தமிழ் வாழும்; தமிழன் வாழ்வான் இதையே என் பொங்கல் செய்தியாகதெரிவித்து அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புரட்சிப் பொங்கல்

**அன்பு நண்பா,**

தைத்திருநாளின்று — தமிழர்கள் இல்லந்தோறும் மகிழ்ச்சி பொங்கிடவும், அவர்களது உள்ளந்தோறும் எழுச்சி பொங்கிடவும், பசியும் பிணியும் இல்லாமையும், ஏழ்மையும், வறுமையும் வாட்டமும் இல்லாதொழிந்து எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவும் எனது இதய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்! ‘பொங்கலோ பொங்கல்’ என்ற பேரொலி எங்கணும் எழுந்து, சர்க்கரைப் பொங்கலாக இனித்து, அறிவுப் பொங்கலாக, சிந்தனைப் பொங்கலாக, விடுதலைப் பொங்கலாக, அடிமைத்தளையுடைக்கும் புரட்சிப் பொங்கலாக புதிய வடிவம், புதிய உருவம் பெற்றிட வாழ்த்துகிறேன்!

தமிழர் தம் வாழ்வில் இடையில் வந்து நுழைந்து கொண்ட பண்டிகைகள் ஏராளம் உண்டெனினும் அவற்றில் பல — ஏதோ ஓர் சமயச்சார்பில், அல்லது மூடப்பழமைகளின் பின்னணியில், பகுத்தறிவுக்கொவ்வா முறையில் விளங்கி வந்திடுவதனை நாமறிவோம்; சாதி கடந்து, சமயம் கடந்து, நாடு கடந்து, உலகத்தமிழர்கள் அனைவரும் உவந்தேத்தும் ஒரேயொரு விழா — தமிழினத்தின் தனிப்பெரும் தேசியத் திருவிழா — இயற்கையோடியைந்த இன்பவிழா — தை முதல்நாள் நாம் கொண்டாடிவரும் பொங்கற்றிருநாள் ஒன்றே ஒன்றன்றோ?

பனி தொலைந்தது; இருள் கலைந்தது; எழு ஞாயிறு எழுந்தனன்; எங்கும் புள்ளினங்கள் ஆர்த்தன; கூவின பூங்குயில்; கூவினகோழி; குவலயத்தினர் குதூகலத்துடன் கண்விழித்தனர்; நாளெல்லாம் வியர்வை சிந்த கழனியிலே நாற்றுநட்டுப் பாடுபட்ட உழவன் தன் உறக்கம் விழித்தெழுகிறான்; தன் உழைப்பின் பயனைக் காணுகிறான்; புதுமணப் பெண்போல தலை கவிழ்ந்து காணப்படும் செந்நெற்கதிர்களைக் காணும் அவனது முகத்தில்தான் எத்துணை களிப்பு; கீழ்வானிலோ செங்கதிர்; அவனது கைகளிலோ செந்நெற்கதிர்!

அதோ, மாங்கனியும் செங்கரும்பும், மாதுளையும் பலாச்சுளையும், இஞ்சியும் மஞ்சளும், இனிய வெல்லமும் ஆ தந்த பாலும் கையிலேந்தி வருகிறாள்—உழவனின் உள்ளம் கவர்ந்தாள்! வீதியெங்கும் விழாக்கோலம்; வீட்டு வாசலிலோ அவள் மாக்கோலம் போட்டிருந்தாள்! புதுச்சுனையில் நீராடி, புத்தாடை புனைந்து, புதுப்பானை கையிலேந்தி பொற்கொடிபோல அவள் ஆடி நடந்து வந்தாள்! கூடவே மகளிர் பலர் கண்களிலே வேலேந்தி, உளத்தினிலே களிப்பேந்தி வருகின்றனர். இதனைக் காண்கின்றான் உழவன் — அவன் குறும்புக்காரத் தமிழ் இளைஞனல்லவா? அவனுக்கு ‘கலிங்கத்துப்பரணி’தான் நினைவுக்கு வருகிறது — அதிலே ஒரு பாடல் உள்ளத்தைத் தொடுகின்றது—

“எங்கும் உளமென் கதலி; எங்கும் உள
தண்கமுகம்; எங்கும் உளபொங்கும் இளநீர்
எங்கும் உள பைங்குமிழ்கள்; எங்கும் உள
செங்குமுதம்; எங்கும் உளசெங்கயல்களே!

ஆ(று) அலை தரங்கம் உள; அன்னம் நடை
தாமும் உள; ஆலை கமழ் பாகும் உள...”

“செவ்வாழைகளை இந்தமகளிரிடம் காணுகிறேன்; செவ்விளநீர்களைக் காணுகிறேனே; பாக்குமரங்களைக் காணுகிறேன்; குமிழம்பூக்களைக் காணுகிறேன்; செவ்வாம்பல் மலர்களையும் சிவந்தகெண்டை மீன்களையும் காணுகிறேன்; இவர்களது வயிற்று மடிப்புக்களோ ஆறுகளில் அசைகின்ற அலைகளைப்போன்று இருக்கின்றன; நடையோ அன்னங்களையொத்து இருக்கின்றன; அவர்கள் பேசும் இனிய சொற்களோ கரும்பு ஆலைகளில் மணம் வீசுகின்ற வெல்லப்பாகை ஒத்து இருக்கின்றன; தமிழகத்தின் அத்தனை வளப்பங்களும் தமிழ் நாட்டுப் பெண்களிடத்திலே அப்படியே படிந்துள்ளனவே!”

கலிங்கத்துப்பரணி காட்டும் மேற்கண்ட சுவைக்காட்சி ஒரு கணம் அவன் மனதில்வந்து போக—உள்ளம் மகிழ்ச்சிக் கடலுடன் சங்கமமாக — அங்கு பொங்கல் நடக்கிறது! சர்க்கரைப்பொங்கல் தான்! தேனும் பாலும், திகட்டிடாத் தீங்கனிகளும், வாழையும் பலாவும் ஏலமும் கட்டிவெல்லமும், கருப்பஞ்சாறும் இஞ்சியும் மஞ்சளும், இனிய நெய்வாசமுமாய் —பொங்கலோ பொங்கலென ஆங்கு நறுமணம் கமழ்கிறது தமிழர் பொங்கல்!! எங்கணும் இன்னிசை! ஆடல்பாடல்! எழுச்சிக்கோலம்! களிக்கின்றாரலால், கவல்ரார் ஒருவரையுமே காணமுடியாத இன்பக்கோலம்! வெள்ளம்போல் தமிழர் கூட்டம், உள்ளத்தாலொன்றாகி கவலையொழித்து களித்து மகிழும் வாழ்விலோர் திருநாள்!

**இத்தகைய எக்களிப்புடன் இன்பப் பெருக்கில் மூழ்கி—தமிழினம் பொங்கல் திருநாளைக்கொண்டாடி பல தலைமுறைகள் கடந்துவிட்டன இன்று! என்றைக்கு தமிழன் தனது ஆட்சியை இழந்தானோ— தனது நாட்டைப் பறிகொடுத்தானோ— அன்றே தமிழன் வாழ்வில் அடிமைஇருள் சூழ்ந்தது! அவல வாழ்க்கையுள் அவன் தள்ளப்பட்டான்!**

தமிழன் தன்னைத்தானே ஆண்ட காலத்தில்— தமிழ் நாடு கொடியோடும் முடியோடும் சீரோடும் சிறப்போடும் “உறுபகையும் ஓவாப் பிணியும் செறுபகையும்” இன்றித் தமிழகம் வாழ்ந்திட்ட காலையில்— தமிழ் எத்துணை உயர்ந்துவிளங்கிற்று; தமிழர்கள் எத்துணை ஆற்றலுடன் வாழ்ந்திருந்தனர் என்பதை எண்ணிடும் போது, ஒரு புறம்மகிழ்ச்சியும், இற்றை நாள் வீழ்ச்சியை எண்ணிடும் போது கவலையுமாக— இருவகையான உணர்ச்சிகளுமன்றோ அலைக்கழிக்கிறது உள்ளத்தில்! போரிலும், ஆட்சித்துறையிலும், நாகரிகத்திலும், பண்பாட்டிலும், இலக்கியத்திலும், தெய்வநெறிகளிலும், காதலிலும், கவிதையிலும், ஆடலிலும், பாடலிலும் மற்றும் இன்னோரன்ன கலைகளில் மட்டுமன்றி —அறிவியற்றுறையிலும் அற்றை நாட் தமிழர் எத்துணை ஏற்றம்பெற்றிருந்தாரென்பதை பழந் தமிழ்ப்பனுவல்கள் விரித்துரைக்கின்ற போது நமக்கு எத்துணை விறுவிறுப்பு ஏற்படுகிறது!

இற்றை நாளில் சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிந்திடவும், செவ்வாய் மண்டலத்தை சென்றடைந்து கோள் ஆராய்ச்சிகள் செய்திடவும் வேற்று நாட்டார் முயன்றிடும் போது—நாம் நமது பழைய நூல்களைப் புரட்டுகிறோம்! அங்கே நம்முன்னோர் சூரியனைப் பற்றியும் அதன் இயக்கம் பற்றியும் ஏனைய கோள்களைப் பற்றியும் காற்றுச்செல்லும் திசைபற்றியும் ஆராய்ந்து அறிந்து வைத்திருந்த மாபெரும் வானிலை ஆராய்ச்சியாளர்களாக

## அரசியல் மடல்

அவர்கள் விளங்கியதை 2000 ஆண்டுகட்கு முற்பட்ட ‘புறநானூறு’ நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

செஞ்ஞாயிற்றுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளி திரி தரு திசையும்
வறிது நிலை இய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர் போல
இனைத்து என்போரும் உளரே —(புறம்-30)

இதுமட்டுமா நண்பா, இன்று சூடுள்ளதைச் சூடாகவே வைத்திருப்பதற்கும், குளிருள்ளதைக் குளிராகவே வைத்திருப்பதற்கும் ‘பிரிட்ஜ்’ (Fridge) எனும் குளிர்சாதனப் பெட்டியொன்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதே போன்று சுடு நீரை ஆறாமல்-அப்படியே வைத்திருப்பதற்கு ‘தேர்மஸ் பிளாஸ்க்’ பயன்படுத்தப்பட்டு வருகிறதல்லவா?

இதேபோன்ற கருவிகள் தொல்பெருந் தமிழகத்திலும் இருந்திருக்கின்றன என்பதை இலக்கியங்களின் வாயிலாக அறிந்திடும்போது எத்துணை பெருமை ஏற்படுகிறது நமக்கு? குளிர்மிகு பனிக்காலத்தில் வெந்நீர் சூடற்றுப் போகாமலிருப்பதற்கு அதை ஒருவகையான பாத்திரத்தில் ஊற்றி வைத்திருந்தனர் பழந்தமிழர். அதன் பெயர் ‘சேமச்செப்பு’ என்று அழைக்கப்பட்டதாக ‘குறுந்தொகை’ எனும் நூல் நமக்குத் தெரிவிக்கிறது!

ஆசில் தெருவில் ஆசில் வியன்கடை
செந்நெல் அமலைவெண்மை வெள்ளிழுது
ஓரில் பிச்சை ஆரமாந்தி
அற்சிர வெய்ய வெப்பத்தண்ணீர்
சேமச்செப்பில் பெறீ இயரோ; நீயே
மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை
எக்கால் வருவது என்றி
அக்கால் வருவர் எம் காதலோரே!

—(குறுந்தொகை 277)

இனி நாம் ‘தேமஸ் பிளாஸ்கை’ குறுந்தொகை கூறும் தூய தமிழ்ப் பெயரான ‘சேமச்செப்பு’ என்று அழைத்திடலாமன்றோ?

இதோ மற்றோர் புறப்பாடல். மழலைச் செல்வத்தின் மாண்பை அப்படியே நம் மனக் கண்முன்னால் கொண்டுவரும் இயல்பில் அமைந்த இந்தப் பாடல், அற்றைநாட் தமிழர்கள், பெரும் செல்வர்களாக இருந்தபோதிலும், அன்னோர் செல்வம் அற்றாரோடு கூட ஒன்றாக அமர்ந்து உணவு உண்டனர் என்பதையும் இப்பாடல் எடுத்துக்கூறி சமத்துவ பூமியாக—சோசலிச நாடாக — தமிழகம் அன்று விளங்கியதை நமக்கும் உலகுக்கும் உணர்த்துகிறது!

படைப்புப்பல படைத்துப் பலரோடு
உண்ணும்
உடைப்பெரும் செல்வராயினும் இடைபடக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறையில்லைத் தாம் வாழுநாளே!

—(புறம் 188)

எத்துணை சுவையானபாடல்! படிக்கும் போதே குழந்தையொன்றின் குறும்புத்தனங்கள் நம் கண்முன்னால் நிழலாடுகின்றன அல்லவா? அறிவுடை நம்பி எனும் புலவரின் ஆற்றல் தான் என்னே?

நண்பா தமிழன் தனது நாட்டைத் தானே ஆண்டகாலத்தில் அன்றோ இத்தகு நிலையிருந்தது தமிழ்நாட்டில்! தமிழினமும் தமிழும் ஏற்றம் பெற்றிருந்தது! தமிழ்ப் புலவர்கள் அவற்றை இலக்கியம் செய்தனர்! இன்றோ உலகிலே நாடற்ற இனமாக — நாதியற்ற இனமாக — ஆறு இலட்சம் தமிழர்கள் —இரத்தக் கண்ணீரன்றோ வடித்திடுகின்றோம்?

**இந்நிலை மாற்றிட — எம் தமிழர்க்கோர் ஆட்சிகண்டிட — தங்கத் தமிழீழத்தை மீண்டும் தோற்றுவித்திட— விடுதலை யாத்திரையிலன்றோ நாம் இன்று ஈடுபட்டிருக்கிறோம்! உலகத்தமிழனுக்கென்றோர் சுதந்திர நாடில்லாக் குறையைப் போக்கிடும் அருமையான வாய்ப்பினை நம்மீது அன்றோ காலம் சுமத்தியிருக்கிறது; கன்னித்தமிழாள் கட்டளையிட்டிருக்கின்றாள்!**

இந்தப் புனிதப் பணியிலே ஈடுபட்டிருக்கும் நாம் — தமிழர் திருநாளாம் பொங்கல் புதுநாளில் புதிய நம்பிக்கையும் புத்துணர்வும் கொண்டிடுவோம்! நாட்டை மீட்கின்ற சீரிய பணிக்கு இதுவரை செய்ததைவிட இன்னும் பலவற்றை வேகமாகவும் விரைவாகவும் செய்திட உறுதியெடுப்போம்! அதே நாளில் பொங்கல்பொங்கி—ஊரோடு சேர்ந்து உண்டு மகிழும் நாளில் ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் கேட்கவேண்டிய கேள்வி ஒன்றுண்டு! அக்கேள்வி இதுதான்!

தமிழரென்று சொல்லிக்கொள்கின்றோம்
நாமும்;
தமிழ் நாட்டின் முன்னேற்றம்
விரும்புகின்றோம்!
எமதென்று சொல்கின்றோம்
நாடோறும்தான்!
எப்போது தமிழனுக்குக் கையாலான
நமதுழைப்பை ஒருகாசை செலவுசெய்தோம்
நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்
அமைவாகக் குந்தி நினைத்தோமா? இல்லை
அனைவரு மிவ்வாறிருந்தால் எது நடக்கும்?

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கேட்கின்ற கேள்வியை ஒவ்வொரு தமிழனும், தமிழச்சியும் உள்ளத்தில எழுப்பி — அக்கேள்விக்கு விடையாக—

‘இழந்த பழம் புகழ் மீளவேண்டும்; நாட்டில்
எல்லோரும் தமிழர்களாய் வாழவேண்டும்!
வழிந்தொழுகும் சுவைத் தமிழே
பெருகவேண்டும்!
மாற்றலர்கள் ஏமாற்றம் தொலையவேண்டும்
விழுந்த தமிழ்நாடு தலை தூக்க என்றன்
உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்”

என்று இப்பொங்கல் புதுநாளில் — தை முதல்நாளில் உறுதி பூண்டு—செந்தமிழ் ஈழத்துக்காக சிறையிலே ஆண்டுக்கணக்காக தவஞ் செய்துவரும்தமிழ் ஈழத்தின் வீரப்புதல்வர்களையும், அவர்களைப்பெற்றெடுத்த அன்னையரையும் கைகூப்பி வணங்கி—பொங்கல் நாளைக் கொண்டாடுவோம்! பூக்கும் தமிழீழம் நோக்கி விரைவோம்!

**உன் அன்புத தோழன்.**

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை முதல் நாள்

**விழா எடுத்து மகிழ்வதிலே விருப்புடையவன் தமிழன். அவன் எடுக்கும் விழாக்கள் எண்ணற்றவையாக பெருகியுள்ளன, ஆனால் அவை அனைத்தும் எம் வாழ்விற்கு ஏற்றம் தருபவையாக அமையவில்லை. ஆனால் தமிழன் கொண்டாடும் தைப்பொங்கலோ மாறுபடும் மதங்களாலும், கூறுபடும கொள்கைகளாலும் வேறுபட்டுக் கிடக்கும் தமிழனை ஒன்றிணைக்கும் விழாவாக— தமிழ் இன உணர்வினை ஊட்டும் விழாவாக மிளிர்கின்றது.**



இவை அனைத்திற்கும் மேலாக "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற வள்ளுவர் வாய்மொழியை வையத்திற்கு அறிவிக்கும், உழவர் பெருமை பேசும் ஒப்பற்ற நாளாகவும் தைப்பொங்கல் திருநாள் திகழ்கிறது. மாறுபட்ட அரசியற் கொள்கையுடையோரும் உணவின் பெருக்கினால்தான் உயிர் வாழமுடியும் என்பதை ஒப்புக்கொண்டு உணவுப்பெருக்கில் ஈடுபட்டிருப்பது உழவின் உயர்வை உணர்த்துகிறது. வேறு சொற்களில் விளம்பின் 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்' என்ற ஒப்பற்ற தத்துவத்தைத் தரணிக்குப் பறைசாற்றும் விழாவாக தைப் பொங்கல் விழா விளங்குகின்றது.

## ஞாயிறு வழிபாட்டின் பழமை

இத்துணை சிறப்புமிக்க விழா எப்பொழுது தோன்றியது? எங்கே தோன்றியது என்பதையிட்டு அறிஞரிடை முடிந்த முடிவு இல்லை. எனினும் இது இயற்கை வழிபாடாகிய — ஞாயிறு வழிபாட்டையும் — தமிழனின் நன்றி மறவாப் பண்பினையும் எடுத்துக்காட்டும் விழாவாக விளங்குகின்றது என்பது பலரும் ஏற்ற முடிவாக விளங்குகிறது. தான் செய்த அறுவடையைக்கண்டு களிப்புறும் உழவன் தன் மகிழ்ச்சியை எடுத்துக்காட்டும் விழாவாக இது தோன்றியிருக்கக்கூடும். இவ்விழா (Festival of the Harvest) அறுவடை விழா என்ற பெயரில் உலகின் பல பாகங்களில் கொண்டாடப்படுவதற்கு சான்றுகள் பலவுண்டு. மற்றும 'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்' என்று இளங்கோவழுத்தும் ஞாயிறு வழிபாடு உலகெங்கும பரவிய வழிபாடாகவும் தமிழனைப் பொறுத்தவரை மிகத் தொன்மை வழிபாடாகவும் விளங்குவதற்கும் இலக்கிய வரலாற்றுச் சான்றுகள் பல உண்டு. இந்த ஞாயிறு வழிபாடே காலப்போக்கில் முருக வழிபாடாக முகிழ்ந்ததென மறைமலையடிகளாரும், திரு. வி. கவும் பொழிந்துள்ளனர். 'விரிவினை' பழந்தமிழர் கொள்கையே சைவம், 'முருகன் அல்லது அழகு' போன்ற நூல்களிற் கண்டுகொள்க.

## தையின் சிறப்பு

ஆண்டின் பன்னிரண்டு மாதங்களும் ஏதோ ஒரு விதத்தில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. குறிப்பாகச் சித்திரையின் பிறப்பை இளவேனிற் காலத்தின் பிறப்பென்றும் மார்கழியின் தோற்றம்சமய உணர்விற்கு ஆக்கம் தருபவையென்றும் கொண்டாடப்படுவது வழக்கம். எனினும் மார்கழி மாதம் 'மயிர் நனையாத் தூற்றல்' என்று தமிழகத்தில், எழுந்துள்ள பழமொழி நோய்நொடிக்கு இடம் கொடுக்கும் மாதம் என்று கணிக்கப்படுகிறது. ஆனால், இதற்கு மாறுபட்ட முறையில் தை பிறக்கின்ற போது நோய்நொடி நீங்கி புதிய தெம்பு வாழ்விலே பிறக்கிறது. எம்மை அறியாமலே ஒரு புதிய உணர்ச்சி— ஒரு புதிய மலர்ச்சி எம் வாழ்வில் தோன்றுகிறது, 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற கூற்றும் இந்த நுகர்ச்சி உணர்விலேதான் தோன்றியிருக்கக்கூடும்.

கதிரவன் வடதிசையிலிருந்து தெற்கு நோக்கி புறப்படும்போது தமிழகத்தில் மாரிகாலம் தொடங்கிறது. நோய்நொடி எம்மை நாடுகிறது. மீண்டும் இதே கதிரவன வடதிசையை நோக்கி வரும்போது பனியும் குளிரும் எம்மைவிட்டு அகல புதிய உற்சாகம் எம் வாழ்வில் தோன்றுகிறது. தமிழன் கொண்டாடும் இத் தைப்பொங்கலை ("மகர சங்கிராந்தி") என்று வடமொழியாளர் அழைப்பர். எனினும், இவ் வடசொல் தைப்பொங்கல் என்ற தமிழ்ச் சொல் உணர்த்தி நிற்கும் உன்னத பொருளை உணர்த்துவதாக இல்லை. இதுவொன்றே தைப்பொங்கல் தமிழனின் தனிச்சிறப்புமிக்க விழா என்பதை வலியுறுத்தி நிற்கிறது.

## தமிழர் புத்தாண்டு

இவ்விதம் பல சிறப்பு பண்புகளின் உள்ளடக்கமாய் விளங்கும் தை முதல் நாளை தனது புத்தாண்டாக தமிழன் இன்று நேற்றல்ல பல நூறு ஆண்டுகளுக்கு முன்பேயே கொண்டாடத் தொடங்கி விட்டான் என்பதை "பத்தன்று நூறன்று பல்லாயிரத்தாண்டாய் தமிழர் வாழ்வில் புத்தாண்டு தை முதல் நாள் பொங்கல் நந்நாள்" என்று புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் புகன்ற கருத்து பொய்யுரையல்ல மாறுக பொருள் பதிந்த பொன்னுரையாகும்.

# தமிழர் திருநாள்

## பொங்கல் நாளில் உவகை பொங்கும்

ஞாயிறு வழிபாட்டின் நயத்தகு தன்மையை உணர்த்தி உலகின் பெருமையை உலகிற்கு உணர்த்தி நிற்கும் இப்பெருநாள்—இத் திருநாள் தமிழனின் நன்றி மறவாத நற்பண்பினையும் பறைசாற்றி விளக்குகிறது. தமிழனின் நன்றி மறவாத நற்பண்பு மானிட இனத்தை மட்டும் தழுவி நிற்கவில்லை. தன் வயலினை உழ உறுதுணையாய் அமைந்த எருதினையும் நனிசுவைமிகு பாலினைத் தரும் பசுவினையும் தமிழனின் நன்றி உணர்வு தழுவி நிற்கிறது. செய்நன்றி கொல்லாத பண்பு தமிழனிடம் ஊறிய பண்பாடு. இதை எடுத்துக்காட்டுவது தைப் பொங்கலை அடுத்துவரும் மாட்டுப் பொங்கலாகும். மாட்டைத் தமிழன் வெறும் மாடாகக் கருதாது செல்வமாகக் கருதி சிந்தையிலே நிறைவெய்தினான்.

இவ்விதம் பல சிறப்பியல் புகளைத் தன்னகத்தே கொண்டு ஒளிவிடும் பொங்கல் திருநாளை தமிழன் தன் குடும்பத்தோடு கூடி தமிழ ஈழ அரிசியையிட்டு பொங்கி மகிழ்கிறான். ஈழம்வாழ் தமிழனைப் பொறுத்தவரை ஆண்டுதோறும் வரும் பொங்கலை வரவேற்றுப் பொங்கி மகிழ்கிறான் என்பது உண்மையே. ஆனால் இந்த மகிழ்ச்சியின் ஊடேயும் தன் வருங்காலம் பற்றி ஒரு ஏக்க உணர்சசி இழையோடியபடி இருப்பதை நாம் மறுப்பதற்கில்லை. எனினும், தை பிறக்கின்றபோது தமிழனுக்கு ஏதோ ஒரு புதிய நம்பிக்கை தோன்றத்தான் செய்கிறது. அந்த நம்பிக்கை இந்த ஆண்டிலாவது வீண் போகாது இருக்க இறைவன் துணை நிற்பானாக.

**ஈழவேந்தன்**

---

# உலகத் தமிழனே ஒன்றுபடு! தமிழ் ஈழத்துக்காக குரல் கொடு!

தமிழுக்காக — தமிழருக்காக — தமிழ் இனத்திற்காக—ஒரு இயக்கம்! நமக்காக, நம்மவருக்காக —நம் வாழ்விற்காக— ஒரு கழகம்! ஐ. நா. மன்றத்தில் இடம்பெறவேண்டிய நாட்டிற்காக ஒரு முயற்சி! ஈழத்திருநாடு - அதன் தலைநகர் யாழ்நகர்! அங்கே தமிழ் மாநாடு! மக்கள் வெள்ளம்! மனம் தாங்கவில்லை சிங்களவனுக்கு! கழனியில் களிறு நுழைந்தது போல்—மதம் பிடித்த மடையர் கூட்டம்—காவலர் வடிவில் புகைக்குண்டுகளை வீசிப் புழுதி எழுப்ப —ஒன்பது உயிர்கள் பலி! கண்ணீர் விட்டே வளர்த்தோம்! கருகிடத்திருவுளச் சம்மதமோ! எனப்பெரியவர்கள் வேதனைக் குரல் கொடுக்க! விழுந்த அடி தமிழனுக்கா— தமிழுக்கா? என உலகத் தமிழ் அறிஞர்கள் ஆராய, எடுத்தது முடிக்கும் துடித்த இளைஞர்கள் இனி ஏன் இலங்கை—அமையட்டும் 'ஈழம்' என முழக்கமிட நடந்து முடிந்த காட்சியை நினையுங்கள்! அந்தக் கொடுமையை உலக அரங்கில் சொல்ல அன்று நமக்கென்று ஒரு நாடில்லை— நாதியில்லை—இன்றும் இல்லை, நாளையும் அப்படியா? என்று கேட்கும் ஆற்றல் **மறவர் படை!**

1956ம் ஆண்டு ஜுன் மாதம் 5ம் தேதி— கொழும்பு காலிமுகக் கடற்கரை! சிங்களம் மட்டும்! பண்டாரநாயகாவின் மசோதாவை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தத் தமிழ் மக்கள் கூட்டம்! கொழும்பு நகரிலா இந்தக் கூட்டம் எனக்கொக்கரித்தனர் அரசின் அடியாட்கள்—காலிக்கடற்கரையிலல்லவா—காலிகள் வரத்தானே வேண்டும். சொல்லும் கல்லும் பாய — வீரமகன் வன்னியசிங்கமும் அஞ்சாநெஞ்சன் அமிர்தலிங்கமும் தாக்கப்படுகின்றனர். இதனை நாடாளுமன்ற மாடியிலிருந்து பார்க்கும் பிரதமருக்குப் பரவசம்!. தமிழர்கள் விரும்பியதை எம்மக்கள் தந்தார்கள் என்று சொல்லி எக்களிப்பு! இரத்தம்சொட்டச் சொட்ட இரு தலைவர்களும் நாடாளுமன்றம் நுழைந்து —வீரம் பேசியது நேற்றைய செய்தி!

யாழ்நகர் காவல் நிலையத்தில் விடுதலை அடைந்தவீரர்களை வரவேற்கப் போன போது தமிழர் விடுதலை முன்னணிச்செயலர் அமிர்தலிங்கம் தலையில் அடிபட [illegible] பழுதடைய, தோழர்கள் தாக்கப்பட தமிழன் தலைநகரிலேயே தலைகுனிய நடந்த நிகழ்ச்சி இன்றையச்செய்தி!

சேரன் ஆண்டான்! சோழன் வென்றான்! பாண்டியன் புறப்பட்டான்! கனகனும் விசயனும் கல் ஏந்தினார்கள்! புலி, வில், கயல் கொடி [illegible] பறக்குது, [illegible]!

இனி காண்போம் புது நிலை! பட்டொளி வீசித் தமிழன் கொடி பறக்கப்போகிறது எனத் 'தமிழன் குரல்' கொடுக்கும் புதிய ஒலி! உள்ளத்தை வாழ்வை மலர வைக்கும் இனிய ஒலி! ஒலிக்கட்டும்!

ஆண்டுக கணக்காக, ஆற்றல் மறவராம் தமிழ் இளைஞர்கள் ஈழத்துச்சிறையில் எங்களை விடுதலைசெய் —அல்லது வழக்குத்தொடு என்று அரசிடம் மோதி — உண்ணுநோன்புப் போராட்டம்— அவர்களுக்கு வலிய உணவை அளிக்கும் முயற்சியிலும் அரசுதோல்வி! ஆறுகோடித் தமிழன் அகிலத்தில் இருக்கிறான்! எத்தனை பேருக்குத் தெரியும் இச்சேதி! இதோ நாங்கள் இருக்கிறோம் என எழுந்து கிளம்பியிருக்கும் தமிழர் கூட்டம் ஒன்று— பட்டால் உண்டு வாழ்வு என தமிழருக்கும் அழைப்பு விடும் இன்பம் கூட்டம்!



'எப்பக்கம் வந்து புகுந்திடும் இந்தி' எத்தனைபட்டாளம் கூட்டி வரும் என்ற கேள்வி அன்று! வந்துவிட்ட இந்திக்கு வால் பிடிக்க நாளை நீயா என்ற கேள்வி இன்று! இந்தியா, ஹிந்தியாவாக மாறுமுன் தமிழனே எழு— விழி! செயல்படு என ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் இருந்து குரல் கொடுக்கும் தமிழகத்துத் தமிழன் கேட்பான் நாளை!

இந்தத் தமிழன் எங்கேதிருந்தப்போகிறான். என்று வேதனைக் கவிதை வடித்த பெருஞ்சித்திரனார். விடுதலை ஆசிரியர் வீரமணி, திரும்பாத இடம்போகிறேன் என விடுதலை வரிகள் எழுதிய நீட்டோலை அடியார், நடிப்பால் நாடு மகிழ்ந்த நடிகவேள் எம். ஆர். இராதா, மாநில சுயாட்சி மலரட்டும் என்று முரசொலி மாறன், மாரிசாமி, சிட்டிபாபு, சாமி

—7-ம் பக்கம் பார்க்க

**டாக்டர் இரா. சனார்த்தனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவத்தில் அறிவியல்

2008 ஆவது வள்ளுவர் ஆண்டு தைமுதல் நாளுடன் 'ஆரம்பமாகி விட்டது. 1968ம் ஆண்டு தைத்திங்கள் முதல் ஒவ்வோர் ஆண்டும் வரும் தை முதல்நாளையே வள்ளுவர் ஆண்டின் தொடக்கமாக அனைத்துலகத் தமிழர்களும் ஏற்றுக்கொண்டு, அதையே பின் பற்றி வருகின்றனர். வள்ளுவரின் 2008ம் ஆண்டு தொடக்கத்தையொட்டி தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் திருக்குறள் பற்றி எழுதியுள்ள கட்டுரையொன்றை சுதந்திரன் வாசகர்களுக்கு சுவையான விருந்தாகப் படைக்கிறோம். —ஆர்



திருவள்ளுவர் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவர். ஆயினும் அன்றே வாழ்வியலின் இயல்பை — உயிரியலின் உணர்வை — உயிரினத்தின் தன்மையை நுண்மாண் நுழைபுலமையுடன ஆராய்ந்து ஈடு இணையற்ற பரிசாகத் திருக்குறளை எழுதி உலகத்துக்குத் தந்தார். உயிர் அறிவுத் தன்மையுடையது; உணரும் இயல்பினது; அனுபவம் ஆர்வமுடையது; இயல்பில் குறையுடையது; முயற்சியில் முழுநிறைபெற வல்லது; துணையும் தோழமையும் பெற்று உயரவல்லது என்றெல்லாம் அறிந்து கூறும்பெருமை திருக்குறளுக்கு உரியது.

உடல் எப்படியும் கருவியே. இக் கருவியை இயக்கும் நாயகம் உயிரேயாம். உடலாகிய கருவிக்கும் உணவு உண்டு. நாயகமாகிய உயிருக்கும் உணவு உண்டு. உடலுக்கு ஐம்பூதங்களிடையில், ஐம் பூதங்களின் கூட்டால் விளைந்த உணவே உணவு. உயிருக்கோ, உயிரினத்தின் சிந்தனையில்தோன்றும் கல்வியும் கேள்வியுமே உணவு. கல்வியால், கேள்வியால் மனிதன் குறை நீங்கப் தானிருப்பார்கள் என்று கதையே கட்டிவிட்டார்கள். அறிவு, துன்பத்தை மாற்றுது போனுல் அறிவு அறிவேயன்று. இதனை.

''அறிவற்றங் காக்குங்
கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்

## தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பெற்றுவளர்கிறான். இந்த உண்மையை எவருக்கும புரியும் வகையில் முதலில் எடுத்துணர்த்திய பெருமை திருக்குறளுக்கே உண்டு.

செவிக்குண வில்லாத
போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்

என்பது குறள்.

ஐம்பூத விளைவு உணவு. அது மிகினும் குறையிலும் நோய் செய்யும். ஏன்? உணவாக மட்டுமின்றி ஐம்பூதத் தன்மையிலேயே மிகினும் குறையினும் நோயேயாம். நிலம், நம் மிடத்தில் மட்டு மல்ல. மற்றவரிடத்தில் பகையையும் விளைவிக்கும் தன்மையுடையது. கல்வியும் கேள்வியும் குறைந்தாலும் பெற்ற அளவுக்குப் பயனுண்டு. மிகுதிப்படின் நோயில்லை; வளர்ச்சியே.

வள்ளுவர் மனிதனின் இன்றியமையாத்தேவை அறிவுடைமையே என்ருர். அறிவை முதனிலைப்படுத்தி முன்னிறுத்தியது போல், திருவள்ளுவர் வேறு எதனையும் முன்னிறுத்தவில்லை.

'அறிவுடையார் எல்லாம்
உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்''

என்று கூறுகிருர். அறிவின்றி வேறு எவை எவை பெற்றிருந்தாலும் அவற் பயனில்லை. என்கிருர். 'என்னுடையரேனும்' என்ற சொற்ருெடரில் சிக்காது எஞ்சியது ஒன்றுமில்லை. திருவள்ளுவர் அறிவுபற்றிக் கூறும்கருத்து அறிவியலுக்கு ஒத்தது. பலர், பல நூற்கள் கற்ற புலமையை அல்லது செய்திகள் அறிந்து கொண்டமையை — அவற்றை எடுத்துச்சொல்லும் திறனையெல்லாம் அறிவு என்று கருதிக் கொண்டிருக்கின்றனர். திருக்குறள், கற்பதையும் கேட்பதையும் அறிவு பெறுதற்குரிய வாயிலாகக் கருதுகிறதே தவிர, அவை தம்மையே அறிவு என்று கருதவில்லை. உணவு செரிக்கப் பெற்றுச்செங்குருதியாக மாறி உடலுக்கு வலிமையாதல் போல், கல்வியும் கேள்வியும் வாழ்க்கைப்பட்டறையில் சோதனை செய்யப் பெற்று அனுபவத்திற்குரியனவாகி உயிர்க்குரிய குணமாகவும், சீலமாகவும், அல்லது ஒழுக்கமாகவும் அதுவடிவம்கொள்ளும் பொழுதே அறிவு என்ற நிலையை அடைகிறது. மனிதனை — மனித உலகத்தைத் துன்பத்திலிருந்து விடுதலை செய்யப்பயன்படுவதே அறிவாகும். இந்த உண்மையை, நாடும் நானிலமும் மறந்து, க[illegible] வறுமை யுடைய[illegible]

என்று கூறுகிறது.

அறிவு மேலும் மேலும் வளரத்தக்கது என்பதும் வள்ளுவர் முடிபு, அறிவுக்கு என்றும் ஒரு 'முடிவில்லை. "அறிதோ றறியாமை" என் வள்ளுவத்தின் வாய்மொழி இந்தத் திருக்குறளைப்புரிந்து கொண்டு நாம் நம்முடைய அறிவைப்பெருக்கி வளர முயன்றிருப்போமானுல் நம்மைப் பீடித்திருக்கின்ற வறுமையிலிருந்து விடுபட்டிருப் போம். நாம்தாம் "வறுமைக்கே காரணம் நாமல்ல, நமக்கு அப்பாற்பட்டுக் கருணை வடிவமாக இருக்கின்ற கடவுளே" என்ற முடிவுக்கு வந்தவர்கள் ஆயிற்றே இவ்வுலகின் வேறு எந்த இனமும் கடவுளுக்கு இவ்வளவு பெரிய களங்கத்தை உண்டாக்கவில்லை. இந்த முறையில் அறிவைப் பெருக்கி வளர்ந்திருந்தால் நாமும் மற்ற நாடுகளைப்போல் வளர்ந்திருப்போம்.

இந்த நூற்ருண்டு, அறிவியல் நூற்ருண்டு. அமெரிக்கக் குடிமகன், ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் இலக்கியங்களில் பேசப்பெற்ற நிலாவுலகைத் தீண்டியிருக்கிருன். தமிழனே தமிழ அறிவியல் மொழியாக வளருமா? வளராதா? என்று ஐயப்பாட்டில் இன்னும் கிடந்து குழம்புகிருன்! வேறு சிலர் அன்று ஆண்டவனுக்கு வடமொழியே உரியதென்று சொன்னதைப்போல அறிவியலுக்கு ஆங்கிலமே உரியதென்று வாதாடுகின்றனர். கூர்ந்து ஆராயின் அது அறிவியல் நாட்டத்தின் விளை வல்ல என்பதும், ஆங்கிலம் படித்த வர்க்கத்தினரின் பாதுகாப்புப் பணியேயாகும் என்பதும் விளங்கும்.

அறிவியலுக்கு இனம் ஏது? எல்லை ஏது? மொழித் தடைதான் ஏது? ஒரு மனிதன் இயல்பாக எந்த மொழியில் சிந்திக்கின்ருனே அதுவே அறிவியல் மொழி. துறைதோறும் ஆய்வு செய்யவும், மேலும் மேலும் சிந்தனை பெருகி வளரவும் தாய் மொழியே துணை. அறிவைத் திருவள்ளுவர் "ஊறும் அறிவு" என்ருர். சுய சிந்தனையின் பாற்பட்ட அறிவே செழுமையான அறிவு. ஊற்றுக்கால் வறட்சியடைவதில்லை; வரத்து நீரை வாங்கித் தேக்கித்தரும் குட்டை, வரவு நின்ருல் வறட்சிப் படும். பிறமொழி அறிவு வரத்து நீர் வாங்கித்தரும் குட்டையேயாகும். சுயசிந்தனையைத் தூண்டி வளர்க்கும் தாய் மொழியறிவு ஊறும் அறிவாகும். இந்த உண்மையை நாடறிந்து, நல்லறிவு வளர்த்துப் பயனடை யும் [illegible] நன்றென்

## உலகத் தமிழர்...

—6-ம் பக்கத் தொடர்

நாதன் — கன்னித் தமிழ் முழங்கிய கந்தப்பன், தூயமணி, இப்படி ஐநூறுபேர் தமிழகத்துச் சிறையில் வாடிட, 'கேட்க ஆளில்லையோ — இதோ நாங்கள் இருக்கிறோம எனும் இங்கிலாந்தின் தமிழர் படை!

ஆண்டாண்டாய் அடிமைப்பட்டவன் மீண்டும் எழவேண்டும்! உறங்குகின்ற கும்பகர்ணன் விழிக்கவேண்டும். தானும் தன் குடும்பமும் தான் உலகம் என்றிருப்பவன் நாட்டை இனத்தை மொழியை எண்ண வேண்டும்! தமிழ் பகைக்குப் பதில்தரவேண்டும்! இன்று நினைத்து நாளை முடியும் ஒன்ரு! இல்லைதான், இன்றல்லது நாளை — நாளையல்லது — மறுநாள் நடக்கத்தானே வேண்டும்! நடைபோடுவோம் — படையெனப் பகை வந்தாலும் எதிர்ப்போம்! ஏற்றம் கொள்வோம்!

''உலகத் தமிழர் ஒன்று
படுவோம்
ஈழத் தமிழருக்குக் குரல்
கொடுப்போம்!''

## தங்குமடம்...

—2-ம் பக்கத் தொடர்

சர் பதவிகளும் ஏனைய பதவிகளும் கிடைக்கலாம். அந்தப் பதவிகளைப் பெற்றவர்கள் வேண்டுமானுல் ஈழத் தமிழகத்தில் ஓர் ஏழைத் தொழிலாளியின் கன்னத்தில் அறைந்து தனது பதவியின் பெருமையைக் காட்டிக்கொள்ளலாம். ஆனுல் அதே வீரத்தை ஒரு சிங்கள இனத்தவன்மேல் அவன் எவ்வளவு ஏழைத் தொழிலாளியாக இருந்தாலும் சரி காட்ட இந்த அமைச்சருக்குத் துணிவு வராது என்று ஒரு சிங்களத் தோழர் கூறியபோது எனக்கும் அவமானமாகத்தான் இருந்தது.


MWS
மில்க்வைற்

## பொங்கல் வாழ்த்து

"பொங்கும் மகிழ்ச்சி எங்கும் பொலிய
இன்று மில்க்வைற் இயம்பும் வாழ்த்துக்கள்!"

அன்பு தழைத்திட எங்கள் வாழ்த்து
ஆட்சி சிறந்திட எங்கள் வாழ்த்து
இன்பம் தழைத்திட எங்கள் வாழ்த்து
ஈகை வளர்ந்திட எங்கள் வாழ்த்து
உழவர் ஓங்கிட எங்கள் வாழ்த்து
ஊக்கம் பெருகிட எங்கள் வாழ்த்து
எண்ணம் உயர்ந்திட எங்கள் வாழ்த்து
ஏழைகள் சிறந்திட எங்கள் வாழ்த்து
ஐயமார் வாழ்ந்திட எங்கள் வாழ்த்து
ஒற்றுமை நிலவ எங்கள் வாழ்த்து
ஓதுவோர் உயர்ந்திட எங்கள் வர்ழ்த்து
ஔவைமார் வாழ்ந்திட எங்கள் வாழ்த்து.

வாழ்த்தும் மில்க்வைற் வளர்ந்திட நீங்கள்
வாழ்த்துக"என்றுமை நாம் வாழ்த்துதுமே.

"சிக்கனம்"
சிக்கன சலவைக்கு
மில்க்வைற் சலவைப் பவுடர்
பாவியுங்கள்.
ஒரு இருத்தல் பைக்ட்
ரூ. 3-50 சதம் மட்டுமே.
ஒரு மில்க்வைற் தயாரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலைப் போ...

—3-ம் பக்கத் தொடர்

தேர்தலுக்கு முன்பு அரசியல் சட்டம் திருத்தப்படக் கூடும் என்று சொல்லப்படுகிறது. இது விஷயத்தில் இலங்கைத் தமிழர் கூட்டணித் தலைவர்களுடன் பிரதமர் சிறிமாவோ பேச்சு வார்த்தை நடத்தக்கூடும் என்றும் தெரிகிறது.

"முதலில் சிறைவைக்கப் பட்டுள்ள தமிழினத் தலைவர்களையும், ஊழியர்களையும் எந்தவிதமான நிபந்தனையுமின்றி இலங்கை அரசு விடுதலை செய்துவிட வேண்டும். அவர்களில் பலர் மீதுள்ள— பலாத்கார குற்றங்களுக்கான வழக்குகள் உட்பட— அனைத்து வழக்குகளையும் அரசு கைவிடவேண்டும். இந்த நல்ல சமிக்ஞைக்குப் பின்னர் தமிழர் கூட்டணித் தலைவர்களை பிரதமர் சிறிமாவோ அழைத்துப் பேச வேண்டும். பேச்சு வார்த்தைகள் இரு தரப்பிலும் திறந்த மனதுடன் நடைபெற வேண்டும். பொதுத் தேர்தல் லாபத்திற்காகத் தான் சிறிமா ஆட்சி சிறிது இறங்கிவர ஆரம்பித்திருக்கிறதென்றாலும், அதையே முடிவான குறிக்கோளாகக் கொண்டுவிடக்கூடாது. அதைவிடவும், விஷத்தன்மை அடைந்துவிட்ட தமிழர்—சிங்களவர் உறவை சீர்செய்யும் நோக்கத்துடன் பிரதமர் சிறிமாவோ முதல் முயற்சி எடுக்கவேண்டும்.

"இலங்கைத் தமிழர் கூட்டணியினரும் ராஜதந்திரத்துடன் நடந்துகொள்ளத் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம். இதில் தமிழர் கூட்டணி சிறிது விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அது தமிழினத்தின் உரிமைப் போராட்ட முறைகளில் கடைப்பிடிக்கும் ராஜதந்திர நடவடிக்கையாகத்தான் கருதப்படவேண்டும். கொள்கைகளை விட்டுக்கொடுப்பதாகக் கருதக்கூடாது.

"வரவிருக்கும் பொதுத் தேர்தலின்போது ஏற்கெனவே அமைந்துள்ள தமிழர் கூட்டணி வெற்றிகரமாக இயங்கவேண்டும். அது தான் இலங்கைத் தமிழருக்குள்ள ஒரே பாதுகாப்பு.

"பொதுவாக, இலங்கை அரசிடம் உலகம் முழுவதிலுமுள்ள தமிழர் எதிர்பார்ப்பது, இலங்கைத் தமிழர்களுக்கு இந்த சமயத்திலேனும் நீதி வழங்கவேண்டும் என்பதேயாகும். பிரதமர் சிறிமாவோவின் ராஜதந்திரத்திற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை சரியான அறைகூவலாகிவிட்டது. அந்த அறைகூவலை அவர் வெற்றிகரமாக சமாளித்தாகவேண்டும்."

—இவ்வாறு தமிழரசுக் கழகத்தலைவரும் தமிழ்நாடு மேல்சபைத் தலைவருமான சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தமது செங்கோல் இதழில் (19-12-76) தீட்டியுள்ள ஆசிரியத் தலையங்கமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## இ. தொ. கழகத்தின் பொங்கல் வாழ்த்து

"உழைப்பாளிகளின் உன்னதத் திருநாள் தைப்பொங்கல் திருநாள். இந்நாளில் ஈழத்தில் வாழும் தமிழர்களின் இதயத்தில் உறையும் இருள் மறைந்து, சுபீட்சமும் நல்வாழ்வும் ஒளிபெற, நாட்டின் வருவாயைப் பெருக்க நாளாந்தம் பாடுபடும் நம் தொழிலாளர்கள் வாழ்வு இந்நாளில் எல்லா வளங்களுடன் சுபீட்சமடைய வாழ்த்துகின்றேன்"

இவ்வாறு இ. தொ. கழகப் பொதுச்செயலாளர் சட்டத்தரணி மு. பரராஜசிங்கம் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## 'வைகறை' வெளியீட்டுவிழா

வேல் அமுதலிங்கம் எழுதிய "வைகறை" சிறுகதை தொகுதி வெளியீட்டுவிழா 15-1-77 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு விவேகானந்த சபை சிறிய மண்டபத்தில் திரு. வ. இராசையா தலைமையில் நடைபெறுகிறது. கே. எஸ். சிவகுமாரன், கவிஞர் இ. அம்பிகைபாகன் வை. நாகராஜன், கரவையூர்ச் செல்வம், கு. குருசாமி ஆகியோர் ஆய்வுரை வழங்குகின்றனர்.

## ஜேர்மனி ஆர்வம்!

தற்போது சிறைவைக்கப் பட்டிருக்கும் காசிஆனந்தனின் சகோதரர் திரு. சுதர்சனைப் பற்றிய தகவல்களை ஜெர்மனியிலுள்ள இன்டர் நெஷனல் அம்னெஸ்டி நிறுவனம் திரட்டிவருகிறது.

செல்லமகால் 14-ம் திகதி முதல்



கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன் நாகேஷ் நடித்த-

கே. பாலச்சந்தரின்

அபூர்வ ராகங்கள்

கெயிட்டி

6-வது வாரம்

ஜெய்சங்கர், லக்ஷ்மி முத்துராமன், ராஸ்தா, சுருளிராஜன், ஐ. எஸ். ஆர்.

நடித்த-

கனிமுத்துபாப்பா

றெக்ஸி

எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா

—நடித்த—

ராமன் தேடிய சீதை

6-வது வாரம்

கெப்பிட்டல் - கிங்ஸ்லி

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, [இரு வேடங்களில்] சந்திரகலா நடித்த-

உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

பிளாசா

கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன் நாகேஷ் நடித்த-

கே. பாலச்சந்தரின்

அபூர்வ ராகங்கள்

விஜயா-லிடோ

(மட்டுநகர்) (யாழ்நகர்)

18வது வாரம்

சிவாஜி கணேசன், ஜெயலலிதா, மஞ்சுளா மேஜர் சுந்தரராஜன், முத்துராமன்,

அவன்தான் மனிதன்

(கலர்)

வெலிங்டன் (யாழ்நகர்)

7-வது வாரம்

சிவாஜி, மஞ்சுளா நடித்த-

மன்னவன் வந்தானடி கலர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் ஜனவரி மாதம் 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.